**தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கமத்தொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூலை 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தெம்பர் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தினை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைபழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில்

தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமானம் பெறுவனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | அரச நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கடந்த ஆண்டின் கணக்குகள் பிரகாரம் நிலுவை வருமானம் ரூபா 439,123,225 ஆக காணப்பட்ட போதிலும் நடப்பு ஆண்டின் இறுதி கணக்கினுள் அதற்கு மேலதிகமாக ரூபா 47,019,598 ஆன தொகை நிலுவை வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் நிலுவை வருமானம் தொடர்பான நம்பகத்தன்மையுடைய அறிக்கைகள் பேணிச்-செல்லப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | அரச நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் 2018/19 பெரும்போகத்திற்காக 20 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்ட மாவட்ட செயலாளர் அலுவலகங்களினால் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே 2021/12/31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 439,123,225.00 ஆக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டது. எவ்வாறாயினும் ரூபா 47,019,598.00 ஆன நிலுவை வருமானம் தற்போதும் காணப்படுகின்றன என மாவட்ட அலுவலகங்களினால் அறிக்கையிடப்பட்டவுடன் அத் தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. | நிலுவை வருமானங்களின் பெறுமதி கணிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற்படி நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கடந்த ஆண்டின் நிலுவை வருமானத்தில் ரூபா 138,204,923 மற்றும் நடப்பு ஆண்டினுள் ரூபா 209,107,022 ஆன நிலுவை வருமானம் உட்பட மொத்தம் ரூபா 347,311,945 ஆன வருமானம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. அந்த மீதி அறவிடப்படாமை சர்ச்சைக்குரியதாகியது. | இந்த நிலுவை வருமானத்தில் 2022 ஆம் ஆண்டினுள் ரூபா 81,244,687 அறவிடப்பட்டுள்ளதுடன் இன்னுமாக அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 266,057,258 ஆகும். | அறவிடப்படாமைக்கான காரணங்கள் தேடியறியப்பட்டு விரைவில் நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

### 1.6.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------- | ------------------------------- | -------------------- |
| (அ) | கமத்தொழில் அமைச்சின் பயன்பாட்டில் காணப்படுகின்ற ஏனைய இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சொந்தமான 15 வாகனங்களின் உரித்து கையகப்படுத்தாது அவற்றின் ரூபா 51,500,000 ஆன பெறுமதி நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 14 வாகனங்கள் இந்த அமைச்சிற்கு கையகப்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஒரு வாகனத்தின் உரித்து குறித்த நிறுவனத்திற்கு மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் கணக்கிற்கு குறித்த சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். | ஏனைய இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்க-ளுக்குரிய வாகனங்களின் உரித்து கையகப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்தம் ரூபா 77,500,000 பெறுமதியான எனினும் அமைச்சின் பொறுப்பில் இல்லாத 14 வாகனங்கள் நிதி அல்லாச் சொத்துக்களாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எனினும் பயன்படுத்தப்படாத 14 வாகனங்களில் தற்போது கையளிக்கப்பட்டுள்ள வாகனங்களின் பெறுமதிகள், சொத்துக்களிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே ஏனைய வாகங்களின் கையளித்தல்களின் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அமைச்சின் பொறுப்பில் இல்லாத வாகனங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமைச்சிற்கு உரித்துள்ள அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற மொத்தம் ரூபா 8,360,000 பெறுமதியான 04 வாகனங்கள் அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாச் சொத்துக்களுள் உள்ளடக்கப்பட்டிருக்க-வில்லை. | குறித்த பெறுமதிகள் வருங்காலத்தில் உள்ளடக்கடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்கள் நிதி அல்லாச் சொத்துக்களாக கணக்கிடல் வேண்டும். |
| (ஈ) | திறைச்சேரி பிரதி செயலாளரின் 2017 திசெம்பர் 21 திகதிய 2/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கை பிரகாரம் அமைச்சினால் வேறு அமைச்சொன்றிற்கு வாகனங்கள் கையளிக்கும் போது கையேற்கும் அமைச்சின் பெயரில் பதிவு செய்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாது கமத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட, ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பயன்படுத்துகின்ற ரூபா 259,300,000 பெறுமதியான 39 வாகனங்கள் இந்த அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இராஜாங்க அமைச்சுக்களின் விடயப் பரப்பு அவ்வப்போது திருத்தப்பட்டு இராஜாங்க அமைச்சுக்கள் முடிவுறுத்தப்பட்டு மீண்டும் இந்த அமைச்சுடன் இணைக்கப்பட்டு வருவதனால் குறிப்பாக சில வாகனங்கள் இராஜாங்க அமைச்சிற்கு கையளித்தல் பிரச்சினைக்குரியது என்பதனால் அவ் வாகனங்கள் கெபினட் அமைச்சு என இல் அமைச்சின் நிதி அல்லாச் சொத்துக்களாக வைக்கப்பட்டு இருக்கின்றமை மேலதிகமாக அவதானிக்கப்படுகின்றது. | இந்த வாகனங்களில் 15 வாகனங்கள் வேறு அமைச்சுக்கள்/ நிறுவனங்கள் பெயரில் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களாவதுடன் இந்த வாகனங்கள் கையகப்படுத்துவதற்கு அல்லது கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 24 வாகனங்கள் இந்த அமைச்சின் கீழ் காணப்பட்ட இராஜாங்க அமைச்சுக்களுக்கு இணைக்கப்பட்ட வாகனங்களாகும். அவ் இராஜாங்க அமைச்சுக்களின் விடயப்பரப்பு அவ்வப்போது திருத்தப்பட்டு இராஜாங்க அமைச்சுக்கள் முடிவுறுத்தப்படு மீண்டும் இந்த அமைச்சுக்கு இணைக்கப்படுகின்றமை- யினால் குறிப்பாக அந்த இராஜாங்க அமைச்சுக்களுக்கு வாகனங்களை கையளித்தல் பிரச்சினைக்குரியதாகும். இதனால் அவ் வாகனங்கள் கெவினட் அமைச்சு என இந்த அமைச்சின் நிதி அல்லாச் சொத்துக்களாக வைக்கப்பட்டு இராஜாங்க அமைச்சிற்கு இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பினும் வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களி-னால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் அந் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-----------------

### 2.1 வருமானம் முகாமைத்துவம்

--------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள்<br>---------------------- | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>----------------------------- | பரிந்துரை<br>-------------------- |
| --- | --- | --- |
| மீளாவாண்டிற்காக 2003.07.00 ஆம் இலக்க வருமான குறியீட்டையுடைய அரச நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேகரித்துக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 1,500,000,000 ஆக காணப்பட்ட போதிலும் சேகரித்த வருமானம் ரூபா 453,206,587 ஆகியதுடன் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 30 சதவீதமாகும். | கடந்த ஆண்டில் 20 மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தமையினால், அதன் அடிப்படையில் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. எனினும், அபிவிருத்தி நிதி திணைக்களத்தினால் குறித்த நிகழ்ச்சித் திட்டம் 4 மாவட்டங்களில் மட்டும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் பிரகாரம் மாவட்ட செயலாளர்களுக்கு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையினால் தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் பெறுமானங்கள் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கு இணையாக எண்ணளவில் வேறுப்பட்டது. | ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருமானங்கள் சேகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள்<br>---------------------- | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>----------------------------- | பரிந்துரை<br>-------------------- |
| --- | --- | --- |
| (அ) ஆண்டு ஆரம்பத்தில் இருந்தே பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராமையினால் 03 மூலதன செலவின விடயங்களின் மொத்தம் ரூபா 278,000,000 ஆன நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | 21/1520/320/154 ஆம் இலக்க 2021.08.31 திகதிய செலவின மீளாய்விற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் சேமிக்கப்பட்டமை. செயற்திட்டத்திற்குரிய பால் தயாரிப்பு இரந்திர உபகரணம் தற்காலிக அடிப்படையில் (Provisional Basis) குத்தகை அறவிடப்படாது இலங்கை | நி.பி 50 ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சுங்கத்தினால் விடுவிக்கப்பட்டதுடன், இரண்டாவதாக குறித்த கணித்தல்கள் மேற்கொண்டு செலுத்தப்பட வேண்டிய குத்தகை தொடர்பாக அறிக்கையொன்று 2021 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்ட பதவியணி தெரிவு செய்யும் பணி பூர்த்தி செய்யப்படாமையின் காரணத்தினால் குறித்த நிர்வாக செலவினங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க-வில்லை. | |
| **(ஆ)** | மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாக கணிக்கப்படாமையின் காரணத்தினால் 20 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 16 மீண்டெழும் செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 13 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மேற்படி மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடு ரூபா 8,395,977,000 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 4,540,336,242 ஆன தொகை, அதாவது 54 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று நிலையினால் போக்குவரத்து மட்டுப்படுத்தினால் சேமிக்கப்பட்டன. உத்தியோகப்பூர்வ ஆடை கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்கு தகைமைகள் காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் குறைந்தமை மற்றும் 21/1520/320/154 ஆம் இலக்க 2021.08.31 திகதிய செலவின மீளாய்விற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் பிரகாரம் சேமிக்கப்பட்டுள்ளன. 21/1520/320/154 ஆம் இலக்க 2021.08.31 திகதிய செலவின மீளாய்விற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் பிரகாரம் செலவினம் கட்டுப்படுத்தப்படல். | நி.பி 50 ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | 2017 திசெம்பர் 21 திகதிய 02/2017 ஆம் இலக்க திறைச்சேரி பிரதி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | பதிவு உரித்து இன்றி பயன்படுத்தப்படுகின்-ற வாகனங்கள், பதிவு உரித்தினை உடைய நிறுவனத்தின் இணக்கத்துடன், தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு அல்லது பதிவு உரித்தினை கொண்ட நிறுவனத்திற்கு முறையாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கை பிரகாரம் கையகப்படுத்துவத-ற்கு அல்லது மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத வேறு நிறுவனங்களின் உரித்தினை கொண்ட 25 வாகனங்கள் கமநல அமைச்சின் பயன்பாட்டில் இருந்தது. | 16 வாகனங்களின் கையேற்றல்கள் தற்போது மேற்கொள்ளப்-பட்டு வருகின்றது. உலக உணவு மற்றும் கமதொழில் அமைப்பிற்கு சொந்தமான JZ–5973 இலக்கமு-டைய வாகனம் கையேற்பதற்கு முடியாமையினால் தற்போது அவ் வாகனங்கள் இ ணைக்கப்பட்-டுள்ள உத்தியோகத்த-ருக்கு பொருத்தமான வாகனமொன்று இ ணைக்கப்பட்ட பின்னர் மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். KJ – 6251 மற்றும் KJ–2652 ஆம் இலக்க வாகனங்கள் உத்தியோகப்பூர்வ வாகனங்களாக இ ணைக்கப்பட்டுள்-ளதுடன் அவ் வாகனங்களின் உரித்து இந்த அமைச்சிற்கு கையளிப்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இணங்-கியிருக்கவில்லை. | பதிவு உரித்தற்று பயன்படுத்தப்படு-கின்ற வாகனங்கள், பதிவு உரித்துடைய நிறுவனத்தின் இணக்கத்துடன் அமைச்சின் பெயரில் பதிவு செய்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதனால் அவ் உத்தியோகத்தர-களுக்கு இணைக்கப்படுவ-தற்கு பொருத்தமான வாகனங்கள் பெறப்பட்டதன் பின்னர் மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இ ந்த அமைச்சின் கீழுள்ள 4 வாகனங்கள் இர ாஜாங்க அமைச்சுக்களுக்-கு சொந்தமான வாகனங்களாகின்-றமையினால் கையேற்கும் தேவை இல்லை. 02 வாகனங்கள் கையகப்படுத்துவ-தற்கு வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் 1646 ஆம் நி.பி | வாகனங்களின் பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்புக்களின் அசல் பிரதி மற்றும் ஓட்டக் குறிப்புக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய ஏப்ரல் தொடக்கம் திசெம்பர் வரை 13 உத்தியோகப்பூர்வ வாகனங்களின் மாதாந்த பொழிப்புக்களும், 2021 மார்ச் தொடக்கம் திசெம்பர் வரை தொகுதி வாகனங்கள் 26 இன் | 2021 ஆம் ஆண்டினுள் நாட்டினுள் காணப்பட்ட கொரோனா தொற்று நிலை காரணத்தினால் பயணத் தடைகள் விதிக்கப்படல் மற்றும் உத்தியோகத்தர்-கள் போன்று ஓட்டுநர்களும் அலுவலகத்திற்கு அழைத்தல் மட்டுப்படுத்தப்பட்-டமையினால் ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் சமர்ப்பித்தல் தாமதித்திருந்த-துடன், அதனுடனே 2022 ஆம் ஆண்டின் ஓட்டக் | வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் 2022 ஏப்ரல் 07 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் பரீட்சிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியமையினால் தாமதம் ஏற்பட்டிருந்தது. |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டின் போது அமைச்சின் மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000,000 ஆன தேறிய நிதியேற்பாடு ஆண்டினுள் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறெனிலும் அச் செலவின விடயத்திற்காக நிதியேற்பாடு இல்லாதிருக்கையில், ரூபா 3,250,000,000 ஆன பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தது. | 118/2/3/43/2202 செலவின விடயத்திற்காக விவசாயிகளுக்கு செலுத்துவதற்கிருந்த இழப்பீட்டிற்கான பொறுப்பு உருவாகியிருந்தது. குறிக்கப்பட்ட பெறுமதி பிரகாரம் நிதியேற்பாடு கோரப்பட்ட போதிலும் தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 1000 மில்லியன் மட்டுமே பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணக்கின் நிதியேற்பாட்டினை மிகைத்த பொறுப்பாக குறித்த பெறுமதி காண்பிப்பதற்கு நேர்ந்துள்ளது. | நி.பி 94 பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படக் கூடாது. |
| **(ஆ)** | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 283,686 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் குறிப்பு இல (iii) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஐயாவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானங்கள் குறித்த பற்றுச் சீட்டுக்கள் தாமதித்து கிடைக்கப் பெற்றமையினால் பொறுப்புக்களாக உள்ளடக்கப்படுவதற்கு முடியாது போனது. எவ்வாறாயினும் முடிந்த வரையில் சரியான எண்ணிக்கை கணக்கில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வாண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளும் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | பயிர்செய்கை சேதங்களுக்காக இழப்பீடு பெற்றுக் கொடுப்பதற்காக 118-2-3-43-2202 செலவின விடயத்தின் கீழ் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,514 மில்லியன் மற்றும் ரூபா 1000 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் குறித்த ஆண்டுகளில் மேற்படி மொத்த நிதியேற்பாடும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. பதிவு செய்யப்பட்ட விவசாயிகள், இழப்பீட்டினை பெற்றுக் கொள்வதற்கு குறித்த பயிர்செய்கை சேதமடைந்த விவசாயிகள் மற்றும் இழப்பீடு பெற்றுக் கொண்ட விவாசாயிகள் உள்ளடங்கலாக மேற்படி பண பயன்பாடு தொடர்பாக கமத்தொழில் அமைச்சு பின்னூட்டல் மேற்கொள்ளப்பட்டிராத-துடன் இழப்பீடுகள் செலுத்துவதற்காக பொறுப்புக்கள் உருவாகியமை தொடர்பில் எந்தவொரு எழுத்துமூல சான்றுகள் பெறப்படாது கமதொழில் காப்புறுதி சபையின் பணிப்பாளர் நாயகம் பெற்றுக் கொடுத்த கடிதமொன்றினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 3,250,000,000 ஆன பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டிருந்தது. | குறித்த 118/2/3/43/2202 செலவின விடயத்திற்கான ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகள் கமதொழில் அபிவிருத்தி பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், அதற்குரிய கோவையில் தொடர்புடைய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இழப்பீட்டு தொகை செலுத்தலானது, கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை ஊடாக மேற்கொள்ள வேண்டியதுடன், அரசிற்கு சொந்தமான நிறுவனமொன்றாவதனால் அனைத்து பிரமாணங்களும் பின்பற்றப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பயிர்செய்கை சேதத்திற்காக இழப்பீடு செலுத்துவதற்கு எழுத்துமூல சான்றுகள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

## 2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ---------------------- | ---------------------------- | ------------------- |
| நிதி பிரமாணம் 371 (5) பிரகாரம் பணி முடிவடைந்து 10 நாட்களுக்குள் பெற்றுக் கொண்ட தற்காலிக இடைக்கால கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் கமத்தொழில் அமைச்சின் 23 | இது தொடர்பாக அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தொடர்ச்சியாக அறிவிக்கப்படுகின்றதுடன், உள்ளக சுற்றறிக்கைகள் ஊடாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கணக்காய்வு ஐயவினாவில் குறித்த | நி.பி 371 (5) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| உத்தியோகத்தர்களினால் 53 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 892,540 ஆன இடைக்கால கட்டுநிதி தீர்க்கப்படுவதற்கு 02 நாட்கள் தொடக்கம் 106 நாட்கள் வரையான கால வீச்சினை எடுத்திருந்தது. | உத்தியோகத்தர்களின் தாமதம் தொடர்பில் காரணம் கூறுமாறு தெரிவித்து அனுப்பப்பட்டது. இன்னுமாக இது தொடர்பில் முறையாக கண்காணிக்கப்பட்டு குறித்த முற்பணம் தீர்க்கப்படுவதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுத்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 2.6 நட்டங்கள் மற்றும் கைவிடல்கள்

---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ---------------------- | --------------------------- | ------------------- |
| அரச உத்தியோகத்தர்களின் ரூபா 44,596 ஆன 2 முற்பண மீதிகள் 2021 ஆம் ஆண்டினுள் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அக் கடன் மீதிகள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் குறிப்பு (i) இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கைதவறுதலாக அப் பெறுமானம் உள்ளடக்கப்பட்டில்லை. | நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ நலிவுகள்**

**3.1.1 கமத்தொழில் அமைச்சிற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்தின் வாடகை ஒப்பந்தம் முடிவுறுத்தல்**

கமத்தொழில் அமைச்சிற்காக வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளரான தனியார் கம்பனி மற்றும் கமத்தொழில் அமைச்சிற்கு இடையேயான 2178 ஆன குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்தல் மற்மம் ரூபா 63 மில்லியன் மீள செலுத்த வேண்டிய வைப்புக்கள் விடுவித்துக் கொள்ளல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குத்தகை ஒப்பந்த காலம் இடையே தேவையெனில் குத்தகைதாரர் மற்றும் குத்தகை கொடுப்போருக்கு ஒப்பந்தத்தினை முடிவுறுத்தக் கூடிய முறை தொடர்பான நிபந்தனை குத்தகை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அக் குறைப்பாட்டினால் 5 ஆண்டுகளுக்கு குத்தகை பெற்றுக் கொள்ளப்பட்ட இந்த சொத்து நான்காம் ஆண்டில் மீண்டும் கையளிக்கும் சந்தர்ப்பத்தில் எஞ்சியுள்ள குத்தகை காலத்திற்கு விகிதாராசமான வாடகை அளவு குறைத்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடம் பயன்படுத்தாத காலப்பகுதிக்காக ரூபா 310,939,139 ஆன குத்தகை தொகை செலுத்தப்பட்டிருந்தது. அச் செலவினம் சிக்கனமற்ற செலவினமாக அவதானிக்கப்படுகின்றது. | ஒப்பந்த காலத்திற்கு முன்னர் முறையான அறிவித்தலின் பின்னர் சூழலிலிருந்து அகன்று குத்தகை ஒப்பந்தம் முடிவுறுத்துவதற்கு குறுகிய காலம் போதுமானதல்ல. அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர்களும், அவ் அவ் பிரிவுகளுக்கு தனித் தனியே இணைக்கப்படுவதற்கு மற்றும் கொவிஜன மந்திர கட்டிடம், பாராளுமன்ற பொதுச் செயலாளரிடமிருந்து மீண்டும் கையேற்கப்பட்டு கமத்தொழில் அமைச்சு நிறுவப்பட்டு அலுவலக சூழலிற்கு பொருந்தும் வகையில் மாற்றப்படுவதற்கு சில நாட்ககள் எடுத்தன. மேலும், குத்தகை வளாகத்தின் தடையற்ற உரித்தினை கையளிப்பதற்கு தேவையான நிலை அமைப்பதற்கு அக் காலக் கட்டத்தினுள் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. | இவ்வாறான செலவினங்கள் ஏற்காதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எவ்வாறாயினும் அனைத்து நடவடிக்கைகளும் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு அமைவானதாகும். | |
| **(ஆ)** | குத்தகை காலத்தினுள் குத்தகைதாரரினால் குத்தகை கட்டிடத்திற்கு நேர்ந்துள்ள சேதம் தொடர்பில் அமைச்சின் பொறியியல் பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் மதிப்பீட்டு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இணைந்து 2021 மார்ச், ஏப்ரல் மாதங்களினுள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குத்தகை கொடுத்த நிறுவனம் மேற்படி பரிசோதனைக்கு பங்கேற்றலினை நிராகரித்துள்ளது. குத்தகை சொத்திலிருந்து நீங்கும் போது இரு தரப்பினரினதும் பங்கேற்றலுடன் பொருத்தமான தொழிநுட்ப நிறுவனமொன்றின் ஊடாக நட்ட சேத அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று ஒப்பந்தத்தினுள் நிபந்தனை உள்ளடக்கப்பட்டிராமையின் காரணத்தினால் கமத்தொழில் அமைச்சின் உத்தியோகத்தர்களினால் ஏற்பட்ட சேதமாக ரூபா 12,710,236 இற்கும் குத்தகை கொடுதோர் நிறுவனம் கட்டிடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதம் ரூபா 28,250,056 எனவும் மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்தமையின் காரணத்தினால் இரு தரப்பினர் இடையே நட்டம் சேதம் தொடர்பாக முரண்டபான நிலை உருவாகியுள்ளதுடன், கமத்தொழில் அமைச்சின் எந்தவொரு பங்கேற்றலும் இன்றி குத்தகை கொடுதோரால் தனியே தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையொன்றின் பிரகாரம் ரூபா 15,539,820 மேலதிக பொறுப்பொன்று உருவாகும் அபாயமொன்று உருவாகியிருந்தது. | குத்தகை ஒப்பந்தம் நிறைவடைந்து கட்டிடம் கையளிப்பதற்கு முன்னர் கட்டிடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் இணங்காணப்பட்டு அதற்காக சேதம் கணிப்பதற்கு கொருத்தமான நிறுவனமொன்றிற்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக DPJ நிறுவனத்திற்கு அமைச்சுடன் இணைந்து அப் புலனாய்வினை மேற்கொள்வதற்காக பங்கேற்குமாறு தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்நிறுவனம் அந் நிகழ்விற்கு பங்கு பெறாமையினால், அமைச்சின் பொறியியல் பிரிவின் ஊடாக சேதம் இணங்காணப்பட்டு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டது. பின்னர் DPJ நிறுவனத்தினாலும் சேதம் கணிக்கப்பட்டு அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ள-மையினால் அவ் அறிக்கைகள் இடையே முரண்பாடுகள் காணப்பட்டன. அதனால், இந்த கட்டிடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதம் கணிக்கப்பட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொள்வதற்காக அரச மதிப்பீட்டு திணைக்களத்திற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மதிப்பீடு திணைக்களத்தினால் | இவ்வாறான சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் ஏற்கப்படல் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றுக் கொடுக்கப்படுகின்ற அறிக்கையின் பிரகாரம் கட்டிடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதத்திற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றமையினால், அமைச்சு அல்லது நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் அடிப்படையில் மேலதிக செலுத்தும் அபாயம் தொடர்பாக முடிவுக்கு வர இயலாது. | |
| (இ) | ஒப்பந்த நிபந்தனை II இன் பிரகாரம் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு குத்தகை சொத்து கையளித்து ஒரு மாத காலத்தினுள் குத்தகைக்கு கொடுத்தவரினால் ரூபா 63 மில்லியன் மீண்டும் செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குத்தகைதாரருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எனினும் குத்தகைதாரர் குத்தகை சொத்தினை கையளித்து ஒப்பந்தத்தினை முடிவுறுத்த செயற்பட்ட அனைத்து சந்தர்ப்பத்திலும் குத்தகை கொடுத்த தரப்பு அதை எதிர்த்தமையினால் மற்றும் ஒப்பந்தத்தின் அடிப்படை நிபந்தனைகளுக்கு முரணாக செயற்பட்டிருந்தமையினால் மேற்படி வைப்பு பெற்றுக் கொள்வதற்கு முடியாது போயிருந்தது. | குறித்த ஒப்பந்தம் பிரகாரம் சொத்தின் உரித்து கையளிக்கப்பட்ட பின்னர் வைப்புத் தொகை குத்தகைதாருக்கு மீண்டும் செலுத்தப்படல் வேண்டும். எனினும் ரூபா 63 மில்லியன் வைப்புத் தொகை இணங்கப்பட்ட பிரகாரம் DPJ நிறுவனம் செலுத்தப்படாததுடன் பல சந்தர்ப்பங்களின் போது DPJ நிறுவனத்திற்கு எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டதுடன் அவர்களும் அதற்கு பதில் அளித்துள்ளனர். எனினும் அத் தரப்பினர் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாமையினால் வைப்புத் தொகை அறவிடப்படுவதற்காக அமைச்சு சட்ட ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் தற்போது சட்டமா அதிபதி திணைக்களம் நிறுவனத்திற்கு கேள்விக் கடிதம் (letter of demand) அனுப்பி மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | வைப்பு தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.1.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கின் அறவிடப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 கணக்கு ஆண்டின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண மீதிகளின் பட்டியல் மற்றும் இணக்க கூற்றின் பிரகாரம் மீதிகளின் இடையே ரூபா 1598 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் இந்த வேறுபாடு ரூபா 1610 ஆக காணப்பட்டதுடன் இந்த குறைப்பாட்டை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வேறுபாடு இந்த ஆண்டின் கணக்குகளில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுப்பாட்டிற்கு காரணங்கள் தேடியறியப்பட்டு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 26/2015 மற்றும் 23/2020 இலக்கங்களை உடைய பொது நிர்வாக சுற்றறிக்கைகள் பிரகாரம் முற்பணம் பெற்றுக் கொடுத்த நாள் தொடக்கம் 10 மாதங்களில் குறித்த கணக்குகள் ஆண்டினுள் அறவிடப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு பணி புரிந்துக் கொண்டிருக்கும் 4 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள மொத்தம் ரூபா 16,000 ஆன விசேட முற்பணம் நடப்பு ஆண்டின் இறுதி திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்டேனும் இருக்கவில்லை. | 2020 திசெம்பர் மாதம் இந்த மீதி கமத்தொழில் இராஜாங்க அமைச்சிற்கு தீர்க்கப்பட்டுள்ளதுடன் பின்னர் அந்த தவணை அறவிடல் கணக்கில் சீராக்கப்பட்ட போதிலும் கைதவறுதலாக தனிப்பட்ட மீதிகள் சரியாக சீராக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த சீராக்கல்கள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும். | கடன் தவணை அறவிடப்பல் வேண்டும். |
| (இ) | 21/2015 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்ட நாள் தொடக்கம் 08 மாதங்களினுள் பண்டிகை முற்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், மாவட்ட | மாவட்ட செயலாளர் அலுவலகங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு அறவிடப்படாதுள்ள பண்டிகை முற்பண கடன் மீதிகளில் இரு உத்தியோகத்தர்களின் கடன் தவணைகள் பெறல் 2021 ஆம் ஆண்டில் நெல் மற்றும் | கடன் தவணை அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டு சேவை புரியும் 07 உத்தியோகத்தர்களுக்கு 2021 ஏப்ரல் மாதத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள மொத்தம் ரூபா 70,000 ஆன பண்டிகை முற்பண தொகையில் கணக்கு ஆண்டினுள் எந்தவொரு அறவிடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தானிய வகைகள் இராஜாங்க அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அக் கடன் தவணை 2022 ஏப்ரல் மாதம் கணக்கு பொழிப்பின் ஊடாக முற்பண பீ கணக்கிற்கு சீராக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 5 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகள் பரீட்சித்து விரைவில் அறவிடப்பட்டு அனுப்புவதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு கடிதங்கள் முன்வைக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள 07 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த பண்டிகை முற்பணம் மற்றும் விசேட முற்பணம் 2021 ஆம் ஆண்டில் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 14,850 மீதியில் நடப்பு ஆண்டினுள் எந்தவொரு அறவிடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 2400.00 ஆன விசேட முற்பணம் நிலுவை கடன் தவணை இந்த ஆண்டின் மார்ச் மாதத்தினுள் அறவிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய கடன் மீதிகள் தீர்க்கப்படுவதற்கு குறித்த மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு விசாரணை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இந்த கடன் தவணைகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | கமத்தொழில் அமைச்சிற்கு இணைக்கப்பட்டு மாவட்ட செயலகங்களில் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ள 27 உத்தியோகத்தர்களிடமிருந்து தவறாக அதிகமாக அறவிடப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 127,960 ஆன மீதி அவ் உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு தீர்க்கப்பட வேண்டிய | அவ் 27 உத்தியோகத்தர்களில் கமத்தொழில் அமைச்சில் சேவை புரிகின்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அதிகமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 1600.00 ஆன கடன் மீதி மீண்டும் செலுத்துவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கமத்தொழில் அமைச்சிற்கு இணைக்கப்பட்டு நெல் மற்றும் தானிய வகைகள் இராஜாங்க அமைச்சிற்கு இடமாற்றப்பட்ட 12 உத்தியோகத்தர்களின் கடன் தவணை அறவிடல்கள் | மீதிகள் தாமதமின்றி தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளாக குறிப்பிட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தது. | ரூபா 54,813.00 ஆக காணப்படுவதுடன் அக் கடன் மீதிகள் ஏப்ரல் மாத கணக்கு பொழிப்பு ஊடாக கமத்தொழில் இராஜாங்க அமைச்சிற்கு தீர்க்கப்பட்டிருந்தது. எஞ்சிய உத்தியோகத்தர்களிடமிருந்து அதிகமாக அறவிடப்பட்ட கடன் தவணைகள் அவ் உத்தியோகத்தர்கள் சேவையாற்றும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களினால் பேணிச் செல்லப்படுகின்ற கணக்கு அறிக்கையுடன் ஒப்பிட்டு உறுதி செய்யப்பட்டு பின்னர் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | அமைச்சின் நிரந்தர பதவியணியில் உள்ளடக்கப்படாத அமைச்சரொருவரின் ஓட்டுநராக செயற்பட்டிருந்த நபரொருவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த பண்டிகை முற்பணமான ரூபா 5,000 இல் எந்தவொரு தவணை கொடுப்பனவுகளும் இன்றி அவர் கடமையை விட்டுச் சென்றிருந்தார். 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடக்கம் நிலுவையாக காணப்பட்டு வருகின்ற நிலுவை கடன் மீதி பொறுப்பு கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமத்தொழில் அமைச்சின் அமைச்சரின் பதவியணியில் கடமையாற்றும் ஓட்டுநர் ஏ.பீ. கமகே, 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்ட பண்டிகை முற்பணமாவதுடன், அம் மீதியில் ரூபா 5000.00 ஆன மீதியொன்று இன்னுமாக அறவிடப்பட வேண்டியதுடன், குறித்த கடன் அறவிடலுக்காக தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் கடன் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபண விதிக்கோவையின் xxiv அதிகாரத்தின் 4.3 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கமத்தொழில் அமைச்சின் சிரேஷ்ட மட்டத்தில் 12 பதவிகளும், மூன்றாம் மட்டத்தில் 5 பதவிகளும், இரண்டாம் மட்டத்தில் 48 | சிரேஷ்ட மட்டத்தின் பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்புவதற்குரியதாக நியமன அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அல்லது நிகழ்கால தேவைக்கேற்ப ஊழியர் எண்ணிக்கை திருத்தப்படுவதற்கு |

பதவிகளும், முதலாம் மட்டத்தில் 13 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்ட போதிலும், அப் பதவிகளுக்கு இணைக்கப்படுவதற்கு அல்லது காலத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மூன்றாம் மட்டத்தின் பதவிகள் நிரப்பும் தேவை ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொடுக்கும் போது தொடர்புடைய பதவிகளுக்கு இணைக்கப்படும். 2021-12-31 இல் உள்ளவாறு இரண்டாம் நிலையில் 2000 பதவிகள் வெற்றிடங்களாக காணப்படுகின்றதுடன், அவற்றில் பல (152) அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் வெற்றிடங்களாகும். அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இணைத்தலுடன் அவ் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் அவற்றுள் தொடர்புடைய சேவை பதவி வெற்றிடங்கள் 31 காணப்படுகின்றதுடன், அவ் வெற்றிடங்கள் ஒடுக்கப்படல் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு பரிந்துரைகள் வழங்குவதற்குள்ளது. முதலாம் மட்டத்தில் காணப்படுகின்ற அலுவலக உதவியாளர் சேவையில் மற்றும் ஓட்டுநர் சேவையில் பதவி வெற்றிடங்களுக்காக தற்காலிக அடிப்படையில் ஆட்சேரப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும், தற்போது புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ள முடியாது. அத்துடன் நூலக உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்துக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.